


**05. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

1. தமிழக சட்டப்பேரவையில் 2026-27-ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மாநில நிதியமைச்சர் திரு. மரியவில்சன் இன்று தாக்கல் செய்தார்.

மதுரையில் சட்டக்கல்லூரி அமைக்கப்படும்

அரசு ஊழியர்களுக்கான அடிப்படை மருத்துவ காப்பீடு ஏழரை லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்

மீனவர்களுக்கான நிவாரண தொகை 7 ஆயிரம் ரூபாயாக அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகள் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளன.

2. த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட் ஏமாற்றம் அளிப்பதாக எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் தொிவித்துள்ளார்.

3. மக்களின் எதிர்பார்ப்புகளை நிதிநிலை அறிக்கை பூர்த்தி செய்யவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி கூறியுள்ளார்.

4. தூத்துக்குடி பனிமய மாதா பேராலய ஆண்டு திருவிழாவின் முக்கிய நிகழ்வான சப்பர பவனி இன்றிரவு நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

தமிழக நிதிநிலை அறிக்கை

தமிழ்நாட்டில் அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமூகநீதி, சமத்துவம் ஆகியவற்றை முன்னிறுத்தி மாநில அரசு செயல்படுவதாக நிதியமைச்சர் திரு. மரியவில்சன் தொிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் 2026-27 நடப்பு நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து பேசியஅவர், 2036-ம் ஆண்டிற்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை எட்ட அரசு உறுதிபூண்டிருப்பதாக கூறினார்.

தமிழக அரசின் டெண்டரில் தற்போது வெளிப்படைத் தன்மை கொண்டுவரப்பட்டு தகுதிவாய்ந்த அனைவரும் பங்கேற்க வகை செய்யப் பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

.. வாய்ஸ் ..

தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் படிப்படியாக நிறைவேற்றப்படும்,

முதற்கட்டமாக 10 ஆயிரம் பள்ளிகளில் தூய்மை பாதுகாப்பை உறுதி செய்ய ஆயிரத்து 369 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

அரசு பள்ளிகளை நவீனமயமாக்க 300 கோடி ரூபாய்,

பெருந்தலைவர் காமராஜர் சிறப்பு பள்ளி திட்டத்திற்கு 125 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

பள்ளி கல்வித்துறைக்கு 44 ஆயிரத்து 527 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

.. வாய்ஸ்..

உயர் கல்வித்துறைக்கு 8 ஆயிரத்து 393 கோடி ரூபாய்,

பொது நூலகங்களை மின்னணுமயமாக்க 10 கோடி ரூபாய்,

கல்லூரி மாணவர்களுக்கு வெற்றி மடிக்கணினி வழங்க 2 ஆயிரம் கோடி ரூபாய்,

மாணாக்கருக்கு நவீன மிதிவண்டி வழங்க 272 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்றார்.

மதுரையில் சிறப்பு சட்டக்கல்லூரி தொடங்கப்படும்,

மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு 23 ஆயிரத்து 357 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

5 மண்டலங்களில் புற்றுநோய் பராமரிப்பு மருத்துவமனைகள் அமைக்கப்படும்,

சமூக நலன், மகளிர் உரிமைத்தொகை வழங்க 9 ஆயிரத்து 818 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

தொழிலாளர் நலத்துறைக்கு 2 ஆயிரத்து 22 கோடி ரூபாய் ஒதுக்கீடு என்றார்.

மீனவர்களுக்கு பணி இல்லாத காலத்தில் வழங்கும் உதவித்தொகை 7 ஆயிரம் ரூபாயாக அதிகரிப்பு,

விளையாட்டுத்துறைக்கு ஆயிரத்து 51 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

கூட்டுறவுத் துறைக்கு 8 ஆயிரத்து 28 கோடி ரூபாய்,

வேளாண் துறைக்கு 14 ஆயிரத்து 984 கோடி ரூபாய்,

மாவட்டந்தோறும், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க 3 ஆயிரத்து 200 கோடி ரூபாய்,

பின்தங்கிய மாவட்டங்களில் புதிய தொழில் மற்றும் சிப்காட் பூங்காக்கள் அமைக்கப்படும் என்றும் அவர் தொிவித்தார்.

தஞ்சை திருவண்ணாமலை, சேலம், கடலூர் விருதுநகர் மாவட்டங்களில் அறிவுசார் குறைபாடு உடையோருக்கான நம்பிக்கை இல்லம் என்ற அரசு நிறுவனங்கள் அமைக்கப்படும்,

மாற்றுத்திறனாளிகள் நலத்துறைக்கு ஆயிரத்து 485 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

மாற்றுத்திறனாளிகளுக்கு உயர்தர உதவி உபகரணங்கள் வாங்க 50 சதவிகித மானிய நிதி உதவி வழங்கப்படும் என்றார்.

புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளப்படும் பயணிகளுக்கு அரசு வழங்கும் மானியம் 35 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்,

சிறுபான்மையினருக்கான உதவும் சங்கங்கள் கூடுதலாக அமைக்கப்படும் என்றார்.

பழங்குடியினர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஆன்றோர் மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்படும்,

நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் சமூக பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் அயோத்தி தாசர் பண்டிதர் வாழ்விட மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்படும்,

பெண் விவசாய தொழிலாளர்களை நில உரிமையாளர்களாக மாற்றும் மண்ணின் மகள் திட்டம் செயல்படுத்தப்படும்,

ஆதிதிராவிடர் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்ய வெற்றி தொழில்முனைவோர் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்து சமயத்துறைக்கு 708 கோடி ரூபாய் ஒதுக்கீடு

மூத்த குடிமக்களின் புனித பயணம் திட்டத்தின் கீழ் இரண்டரை லட்சம் பேர் பயன்பெறும் வகையில் 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

மாமல்லபுரத்தை சர்வதேச சுற்றுலா தலமாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்

ஒகேனக்கல் காவிரி, மதுரை வைகை, பாபநாசம் தாமிரபரணியில் நதி சுற்றுலா உருவாக்கப்படும்

அரசு ஊழியர்களுக்கான அடிப்படை மருத்துவக் காப்பீடு 5 லட்சத்திலிருந்து ஏழரை லட்சமாக உயர்த்தப்படும் என்றார்.

சமூகப் பொறுப்பை இளைஞர்களிடையே ஏற்படுத்தும் ஒருங்கிணைந்த இளைஞர் மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்படும்

சர்வதேச விளையாட்டு போட்டிகளில் சிறந்து விளங்கும் 500 வீரர்களுக்கு நிதியுதவி வழங்க கூடுதல் நிதி ஒதுக்கீடு

தமிழ்நாடு கிராமிய விளையாட்டு போட்டிகள் உலக அரங்கிற்கு கொண்டுசெல்ல நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

வரும் செப்டம்பர் 15-ம் தேதி முதல் குழந்தைகளுக்கு தாய்மாமன் சீர் வழங்கும் திட்டத்திற்கு 560 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்த பட்ஜெட்டில் மொத்த வருவாய் 3 லட்சத்து 50 ஆயிரத்து 27 கோடி ரூபாய் என்று கூறிய அமைச்சர்,

மாநிலத்தின் சொந்த வா◌ி வருவாய் 2 லட்சத்து 54 ஆயிரம் கோடியாக இருக்கும் என்றா◌ா◌்.

வா◌ி வருவாய் 9.78 சதவிகித வளர்ச்சியடையும் என்று தொ◌ிவித்துள்ள அமைச்சர், வருவாய் பற்றாக்குறை 55 ஆயிரத்து 775 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறினா◌ா◌்.

❖❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட் ஏமாற்றம் அளிப்பதாக எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் தொ◌ிவித்துள்ளார்.

சட்டப்பேரவை வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், தி.மு.க அரசின் திட்டங்களை பெயர்மாற்றம் செய்து தற்போதை அரசு புதிய திட்டங்களாக தொ◌ிவிப்பதாக குறை கூறினார்.

தேர்தல் நேரத்தில் வழங்கிய வாக்குறுதிகள் எப்போது நிறைவேற்றப்படும் என்று வினா எழுப்பினார்.

❖❖❖❖❖❖❖❖❖

எடப்பாடி கே.பழனிச்சாமி

தேர்தல் நேரத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் தொடர்பாக பட்ஜெட்டில் எந்த அறிவிப்பும் இல்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே.பழனிச்சாமி தொ◌ிவித்துள்ளா◌ா◌்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2 ஆயிரத்து 500 ருபாய் மகளி◌ா◌் உா◌ிமைத்தொகை ஆண்டுக்கு 6 சிலிண்டர்கள் தொடர்பான வாக்குறுதிகள் இல்லை என்றா◌ா◌்.

மக்களுடைய எதி◌ா◌்பர்◌ாப்புகள் எதையும் இந்த பட்ஜெட் பூர்த்தி செய்யவில்லை என்றும் குறை கூறினா◌ா◌்.

❖❖❖❖❖❖❖❖❖

J.C.D. பிரபாகர்

தமிழக சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடர் அடுத்தமாதம் 8-ம் தேதி வரை நடைபெறும் என்று பேரவைத்தலைவர் திரு. J.C.D. பிரபாகர் அறிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

தாய்ப்பால்

உலக தாய்ப்பால் வார விழாவையொட்டி திருவாரூர் மாவட்டம் மன்னா◌ா◌்குடி அரசு மருத்துவமனையில் ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கி தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை குழந்தைகள் நல மருத்துவர் டாக்டர் ராகுல் வலியுறுத்தினா◌ா◌்.

... வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

நீட் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப் பட்டன.

மக்களவை இன்றுகாலை கூடியதும், அவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா கேள்வி நேரத்தை எடுத்துக்கொள்ள முயன்றபோது நீட் விவகாரத்தை எழுப்பி எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் அவையை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவை இன்று கூடியதும் இதே பிரச்சனைகள் எதிரொலித்ததால் அமளியினூடே அவைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் பூஜ்ஜிய நேரத்தை எடுத்துக்கொள்ள முயன்றார்.

அப்போது பேசிய பி.ஜே.பி. உறுப்பினர் 7 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில் ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370-வது அரசியல் சிறப்பு பிரிவு திரும்பப் பெறப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

நாட்டின் முதலாவது பசுமை ஹைட்ரஜன் ரயில் ஹரியானாவில் தொடங்கப்பட்டது குறித்து பெருமிதம் தொ◌ிவித்து பிரதமர் திரு. நரேந்திரமோடிக்கு நன்றி தொ◌ிவித்தார்.

ஆனால் அவையில் நீட் உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி தொடரவே அவை முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் 2 மணி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖

நிதின்கட்கரி

நாட்டில் பல்வேறு பகுதிகளில் ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் ஏற்படுத்தப்படும் என்று மத்திய சாலை போக்குவரத்து நெடுஞ்சாலை துறை அமைச்சர் திரு. நிதின்கட்கரி தொ◌ிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர் ஏற்கனவே 300 பயிற்சி பள்ளிகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதாக கூறினார்.

22 லட்சம் ஓட்டுநர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

பனிமயமாதா

தூத்துக்குடி பனிமய மாதா பேராலயத்தின் 444-வது ஆண்டு திருவிழாவின் முக்கிய நிகழ்வான அன்னையின் திருவுருவ சப்பர பவனி இன்றிரவு நடைபெறுகிறது.

இதனையொட்டி பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் தூத்துக்குடிக்கு வருகை தந்தவண்ணம் உள்ளதாக எமது செய்தியாளர் தொ◌ிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

தென்கொரியா அசானில் நடைபெறும் கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் மகளி◌ா◌் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் **Isharani Baruah** முன்னேறியுள்ளா◌ா◌்.

ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் இந்தியாவின் Rounak Chouhan – தென்கொரியாவின் ஜின் ஜியோனை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖